பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
25 07 2026 SATURDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வினாத்தாள் கசிவைத் தடுப்பதற்கான அரசின் நடவடிக்கைகள் குறித்த தமது காணொலிப் பதிவுக்கு பெருமளவு ஆதரவளித்த பொதுமக்கள் மற்றும் இளையோருக்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டில் வரி செலுத்துவோரின் நலன்களை கருத்தில் கொண்டு ஏராளமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் ரயில்வே திட்டங்களை விரைவுபடுத்த தேவையான நிலங்களை மாநில அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களின் சில இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி ஹராரேவில் இன்று நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

வினாத்தாள் கசிவைத் தடுப்பதற்கான அரசின் நடவடிக்கைகள் குறித்த தமது காணொலிப் பதிவுக்கு பெருமளவு ஆதரவளித்த பொதுமக்கள் மற்றும் இளையோருக்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தாம் வெளியிட்ட காணொலிப் பதிவில், வினாத்தாள் கசிவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குறிப்பிட்டதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மிகப் பெரிய ஆதரவு அளித்து, நேர்மறையான யோசனைகளை பலர் தெரிவித்துள்ளதாகவும், அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டில் வரி செலுத்துவோரின் நலன்களை கருத்தில் கொண்டு ஏராளமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

167வது வருமான வரி தினத்தை ஒட்டி, புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், வெளிப்படையான, திறன் வாய்ந்த வரி நிர்வாகத்தை உறுதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

வரி செலுத்துவோரின் நலன்களை உறுதி செய்ய நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

வணிகம் செய்வதை எளிதாக்குவது மற்றும் வரி செலுத்துவோரின் நம்பிக்கையை வலுப்படுத்துவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் விளையாட்டு கட்டமைப்பை வலுப்படுத்த அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதர் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குஜராத், பஞ்சாப், ஹரியானா போன்று தமிழகத்திலும் விளையாட்டு கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

பயிற்சி நடைமுறைகளை மேலும் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் ரயில்வே திட்டங்களை விரைவுபடுத்த தேவையான நிலங்களை மாநில அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், திண்டிவனம் – திருவண்ணாமலை, மன்னார்குடி – பட்டுக்கோட்டை உள்ளிட்ட ஐந்து முக்கிய ரயில் திட்டங்களுக்கு, மாநில அரசு நிலம் தராததால், பணிகள் முடங்கியுள்ளதாக ரயில்வே அமைச்சர் கூறியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் ரயில்வே திட்டங்களுக்கான தேவையில், 26 சதவீத நிலத்தை மட்டுமே மாநில அரசு இதுவரை வழங்கியுள்ளது என்ற தகவல் அதிர்ச்சியளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முந்தைய திமுக அரசு காட்டிய அதே அலட்சியப் போக்கை தற்போதைய அரசும் தொடர்வதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மாநிலத்தின் வளர்ச்சியையும், மக்கள் தேவையையும் கருத்தில் கொண்டு, ஐந்து ரயில்வே திட்டங்களையும் விரைந்து செயல்பாட்டுக்கு கொண்டுவர மாநில அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

மேகதாது அணை விவகாரத்தில், கர்நாடக அரசுடன் பேச்சு நடத்தாமல், சட்டரீதியிலான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாது அணை விவகாரத்தில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியமே இல்லை என்று தெரிவித்தார்.

அணை கட்டுவதற்கு, தமிழகம் எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையில், பேச்சுவார்த்தை நடத்தினால், அது மாநிலத்தின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

இந்த விவகாரத்தில் த.வெ.க. அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை உடனடியாக கூட்டி, விவாதிக்க வேண்டும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

18 வயதுக்குட்பட்ட சிறார்கள் வாகனம் ஓட்டுவதை பெற்றோர் ஊக்குவிக்கக் கூடாது என்று சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு. அமல்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில், காவல்துறை சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சாலை விதிகளை அனைவரும் மதித்து நடக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

(சவுண்ட் பைட் - அமல்ராஜ் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

சேலத்தில் பாரம்பரியமாக நடைபெறும் எருதாட்டம் நேற்று நடைபெற்றது.

இதனைக் காண, மாவட்டம் முழுவதிலுமிருந்து ஏராளமானோர் வந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 56 செகண்ட்)

>>>>>><<<<<<

*தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களின் ஒருசில இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மாநிலத்தின் பிற பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.*

*வேலூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி செலசியஸ் அதிகரித்து காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, அரியலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்றிரவு பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - ராம்குமார் 37 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

இருவரிச் செய்திகள்

*தென் சீனக் கடல் பகுதிகளில் பிலிப்பைன்ஸ் நாட்டின் 2 கப்பல்கள் மீது சீனா ஒரே வாரத்தில் மூன்றாவது முறையாகத் தாக்குதல் நடத்தியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*நாட்டின் சேவைத் துறை ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 421 புள்ளி 3 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்ததாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*ஒரு மாவட்டம் - ஒரு தயாரிப்பு திட்டத்தின் கீழ் நாட்டில் 773 மாவட்டங்களில் ஆயிரத்து 244 தனித்துவமான தயாரிப்புகளின் விற்பனைக்கு ஊக்கம் அளிக்கப்படுவதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*பிரமரின் கிராமப்புற சாலைகள் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இதுவரை 26 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணையமைச்சர் திரு கமலேஷ் பாஸ்வான் கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*தமிழகத்தில் மின்துறை சீரமைப்புப் பணிகளுக்காக 29 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபத் நாயக் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*கிருஷ்ணகிரி மாவட்டம் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்தில் இருந்து இன்று முதல் 120 நாட்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படும் என்று நீர்வளத்துறை கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*பெண் குழந்தைகளைக் காப்போம் - பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் தலைமையில் நடைபெற்றது*

*>>>>>><<<<<<*

*திருப்பத்தூரில் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம், மாவட்ட ஆட்சியர் திரு. ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

மக்கள்தொகை கணக்கெடுப்பில் இணையதளம் வாயிலாக சுயமாக விவரங்களை பதிவு செய்யும் வசதியின் கீழ், சென்னையில் இதுவரை 56 ஆயிரம் குடும்பங்கள், தகவல்களை பதிவேற்றம் செய்துள்ளதாக மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்தி

இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஹராரேவில் இப்போட்டி, மாலை மணி 4.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<